தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை
ஆலோசகர் சுற்றறிக்கை 2004/நூல/02(அ) (திருத்தியமைக்கப்பட்ட 2019)

## உள்ளூராட்சி நிறுவனங்களுடன் தொடர்புடைய பொது நூலகங்களில் "ஒக்டோபர் – தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சித்திட்டம்" இனை நடைமுறைப்படுத்தல்.

### 01. அறிமுகம்

2004 ஆம் ஆண்டு முதல் ஒக்டோபர் மாதத்தினை தேசிய வாசிப்பு மாதமாக அரசு பிரகடனப்படுத்தியதுடன், 2019 ஆம் ஆண்டுக்குரிய ஒக்டோபர் மாத தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வாசிப்புப் பழக்கத்தினை ஊக்குவிக்கும் முகமாக **விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்** மற்றும் **விசேடமான செயற்திட்டங்களை** நடைமுறைப்படுத்துமாறு சகல பொது நூலகங்களிடமும் கோரியுள்ளது. 2018 ஆம் ஆண்டு முதல் தேசிய வாசிப்பு மாதத்திற்கென குறிப்பிட்டதொரு தொனிப்பொருளின் கீழ் நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கமைப்பதற்கு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை எதிர்பார்த்துள்ளது. அதற்கிணங்க இவ் வருடத்தின் தேசிய வாசிப்பு மாதத்தினை **"வாசிக்கும் சமூகத்தினை உருவாக்க, சிறுவர்களிடமிருந்து ஆரம்பிப்போம்"** எனும் தொனிப்பொருளை மையமாகக் கொண்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### 02. வாசிப்பு மாதத்தின் செயற்திட்டக் குழு

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்வதற்காக " வாசிப்பு மாதத்தின் செயற்திட்டக் குழுவொன்று" இனை நியமிப்பது உசிதமானது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது நூலகக் குழுவொன்று காணப்படுமாயின் அக் குழுவின் மூலம் மற்றும் வாசிப்புச் சமூகத்தின் ஒத்துழைப்புடன் இந் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமாக இருப்பதுடன், பிரதான செயற்பாட்டுக் குழுவொன்றினை நியமித்துக் கொள்வதும் உசிதமானதாக அமைந்திருக்கும். அதன் கட்டமைப்பு கீழ்வருமாறு அமைந்திருத்தல் வேண்டும்.

- நிறுவனத் தலைவர் அல்லது பிரதித் தலைவர் – குழுத் தலைவர்
- மா நகர ஆணையாளர் அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தின் செயலாளர் – உப தலைவர்
- நூலகர் / பொறுப்பதிகாரி – குழுச் செயலாளர்
- சமுதாயஞ் சார் அபிவிருத்தி அலுவலர்
- நிறுவனத் தலைவரினால் பெயர்க் குறிப்பிடப்படும் அங்கத்தவர்கள் மூன்று பேர் ( பிரதேசத்தில் பிரபலடைந்த எழுத்தாளர், வலயக் கல்வி அலுவலகத்தின் ஆசிரிய ஆலோசகர், பிரதேச செயலகத்தின் சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது கலாச்சார உத்தியோகத்தர் போன்றோரில் மூவரை தெரிவு செய்துக்கொள்வது சிறந்ததாகும்)

### 03. தொனிப்பொருளினை மையமாகக் கொண்டு நடைமுறைப்படுத்த முடியுமான விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

- தொனிப்பொருளுடன் தொடர்புபட்ட நூலகத்தில் காணப்படும் பல்வேறுபட்ட பகுதிகளின் (வகைகள்) கீழ் அமைந்த புத்தகங்களின் தொகுப்பினை இனங்காணல்.
  - ஆக்கபூர்வமான சிறுவர் இலக்கிய நூல்கள்
  - கலை சார்ந்த படைப்புக்கள்
  - விமர்சன ரீதியான நூல்கள் ( சிறுவர் நூல்கள் தொடர்பாக எழுதப்பட்டது)
  - சுயசரிதைகள்
- அப் புத்தகங்களின் தொகுப்பினை வருடத்தினுள் விசேட ஏற்பாடுகளை மேற்கொண்டு விளம்பரப்படுத்துதல் மற்றும் வாசகர்களின் வாசிப்புத் திறனை ஊக்குவித்தல் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- உத்தேசிக்கப்பட்ட தொனிப்பொருளுக்கு உரித்தான தற்போது நூலகத் தொகுப்பில் காணப்படாத உள்நாட்டு / வெளிநாடுகளைச் சேர்ந்த பல்வேறுபட்ட நூல்களை இனங்கண்டு கொள்ளல் மற்றும் அப் புத்தகங்களை கையகப்படுத்திக் கொள்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வாசகர்களின் ஆக்கப்பூர்வத் திறமையை எடுத்துக் காட்டும் படைப்புக்களை உள்ளடக்கிய சஞ்சிகையொன்றினை வெளியிடுதல்.
- சுவர் செய்தித்தாள்கள், புத்தகப் பட்டியல்கள், குறியீட்டு எண்முறை, இதழ் வெட்டுத் துணுக்குத் தொகுப்பு வெளியீடுகளை மேற்கொள்ளல்.
- விசேடமான போட்டிகளை நடாத்துதல். (கட்டுரை, சித்திரம், பேச்சுப் போட்டி, விவாதங்கள், நாடகம், பாடல்கள்)
- செயலமர்வுகள் மற்றும் விரிவுரைகளை ஏற்பாடு செய்தல். ( புனைவுக் கதையில் ஈடுபடும் பிரதேசத்தில் வாழும் எழுத்தாளர்கள், நிபுணர்களை தொடர்புபடுத்திக் கொள்வது மிகவும் உசிதமானது.)
- விளம்பரப் பலகை / மேற்கோள் உரைகள் மற்றும் விளம்பரச் சுவரொட்டிகளை காட்சிப்படுத்தல், துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு விநியோகித்தல்.
- புத்தகக் கண்காட்சிகளை நடாத்துதல்.
- இணையத்தள வலையமைப்பின் ஊடாக தொனிப்பொருளுக்கு உரிய தகவல்களை ஆராய்ந்து தயாரிக்கப்பட்ட கணனி நிகழ்ச்சித்திட்டங்கள் (Power point presentation), Face book அறிவித்தல்களை உருவாக்குதல்.
- கதை நேரங்கள், திரைப்படங்கள் மற்றும் வீடியோக் காட்சிகள் போன்ற பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- தெரிவு செய்யப்பட்ட தேசிய பருவ இதழ் அல்லது பல பருவ இதழ்கள் தொடர்பாக அறிஞர்களின் கலந்துரையாடல் / உரை அல்லது கலை சார்ந்த வேலைத்திட்டமொன்றை ஏற்பாடு செய்தல்.

## 04. பொதுவாக நடைமுறைப்படுத்த முடியுமான நிகழ்ச்சித்திட்டங்கள்

- வாசிப்பு முகாம்கள், வாசிப்பு போட்டிகளை ஏற்பாடு செய்தல்
- வாசிப்புச் சமூகத்தினை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.
- நூலக அங்கத்தவர்களை அதிகரிப்பதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைதல்.
- பிரதேசத்தில் உள்ள ஏனைய நூலகங்களுடன் இணைந்து வாசிப்பினை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல்.
- உள்ளூராட்சி பிரதேச பகுதிகளில் உள்ள எல்லா வீடுகளுக்கும் ஒரு நுலகம் என்ற எண்ணக்கருவிற்கமைவாக ஒரு புத்தக அலுமாரியினைக் கொண்ட நூலகமொன்றினையாவது ஆரம்பித்தல். இதன்பொருட்டு பிரச்சார நடவடிக்கைகளை அமுல்ப்படுத்தல்.
- நூலக முகநூல் (Face Book) உடன் தொடர்புடைய வாசகர்களை அடையாளங் கண்டு ஏனையவர்களையும் முகநூலுடன் தொடர்புபடுத்திக் கொள்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல். முகநூலில் வாசிப்பு தொடர்பான மேற்கோள் உரைகள் மற்றும் கருத்துக்களை பரிமாறிக் கொள்ளல்.
- நிறைவேற்றப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான தகவல்களை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் மூலம் வெளியிடுதல்.
- திறமைகளை மதிப்பீடு செய்வதற்காக பரிசுகள் மற்றும் சான்றிதழ்ப் பத்திரங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.
- சிறுவர் வாசிப்பினை ஊக்குவிக்கும் முகமாக ஏனைய ஆக்கபூர்வமான நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குறச் செய்தல்.

## 05. நிதி

இதற்காக பாரியளவில் நிதியை உபயோகப்படுத்த தேவையில்லை. தேவைப்படும் நிதியினைப் பெற்றுக்கொள்வதற்காக குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களின் மூலம் அல்லது நூலகத்தின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

## 06. அறிக்கை தாயரித்தல்.

- மேற்கொள்ளப்பட்ட சகல நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக தெளிவான முறைமை சார்ந்த அறிக்கையொன்றினை ( அச்சு / இருவெட்டு மூலம் தயாரிக்கப்பட்ட) குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின் தலைவரின் சிபாரிசுடன் **2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28** ஆந் திகதிக்கு முன்னர் **பிரிவுத் தலைவர், விரிவாக்கல் சேவைகள் பிரிவு, தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, இலக்கம் 14, சுதந்திர வழி, கொழும்பு** 07 எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

- தேசிய வாசிப்பு மாதத்தில் வெற்றி பெற்ற நுலகங்களைத் தேர்ந்தெடுப்பதற்காக அடிப்படையாக கருத்திற் கொள்ளப் பட வேண்டிய அறிக்கைகளைத் தயாரிக்கும் போது மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கிய வாசிப்பு ஊக்குவிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மாத்திரம் புள்ளிகளைப் பெற்றுக்கொடுக்கும் முறைமையொன்று பின்பற்றப்படுகின்றது. அதனால் நூலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படுத்தப்பட்ட ஏனைய சமுதாயஞ் சார் சேவைகள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையினை அதில் சேர்த்தல் கூடாது. உதாரணம் : சிரமதானம் / தன்ஸல் / இரத்த தானம் வழங்குதல் என்பவை.

- அறிக்கையினைத் தயாரிக்கும் போது அதன் வெளிப்புற அட்டை / புத்தகக் கட்டலிற்கு மேலதிக காலம் மற்றும் நிதி அவசியமில்லை. தேசிய வாசிப்பு மாத்தின் தொனிப்பொருளுக்கு அமைவாக செய்யப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் குறிப்பிட்ட வருடம் முழுவதும் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் தகவல்களை தனித்தனியான புகைப்படங்களுடன் மற்றும் உறுதிப்படுத்தக்கூடிய வேறு காரணிகளுடன் முன்வைத்தல் போதுமானதாகும்.

## 07. மதிப்பீடு

- தேசிய வாசிப்பு மாதத்தின் (2019) வினைத்திறன் மிக்க நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்திய நூலகங்களுக்கு 2020 ஆம் ஆண்டு தேசிய வாசிப்பு மாதத்தின் தேசிய விழாவின் போது பரிசுகள், சான்றிதழ் மற்றும் விருதுகள் வழங்கப்படுகின்றது. மதிப்பீட்டு நடவடிக்கைகள் நூலக மட்டங்களில் இடம்பெறுவதனால் ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உரிய பொது நூலகங்கள் மற்றும் கிளை நூலகங்கள் வெவ்வேறாக தங்களது அறிக்கைகளை அனுப்புதல் வேண்டும். இறுதியாக தேர்ந்தெடுக்கப்படும் நூலகங்கள் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால் மதிப்புரை வழங்கப்பட்டதன் பின்னர் விருதுகளுக்கு உரித்துடைய நூலகங்கள் எவை என தீர்மானிக்கப்படும்.

**சட்டத்தரணி பி.எம். தீபால் சந்திரரத்ன**
தலைவர்

தொடர்புகளுக்கு :- தொலைபேசி இலக்கம் – 011 2698847, தொலைநகல் - 011 2674387,
இணையத்தளம் – www.natlib.lk

## பாடசலைகளில் " தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சித்திட்டம் - ஒக்டோபர் " இனை நடைமுறைப்படுத்தல்.

### 01. அறிமுகம்

2004 ஆம் ஆண்டு முதல் ஒக்டோபர் மாதத்தினை தேசிய வாசிப்பு மாதமாக அரசு பிரகடனப்படுத்தியதுடன், 2019 ஆம் ஆண்டுக்குரிய ஒக்டோபர் மாத தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வாசிப்புப் பழக்கத்தினை ஊக்குவிக்கும் முகமாக விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விசேடமான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு பாடசலைகளிடம் கோரியுள்ளது. 2018 ஆம் ஆண்டு முதல் தேசிய வாசிப்பு மாதத்திற்கென குறிப்பிட்டதொரு தொனிப்பொருளின் கீழ் நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கமைப்பதற்கு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை எதிர்பார்த்துள்ளது. அதற்கிணங்க இவ் வருடத்தின் தேசிய வாசிப்பு மாதத்தினை **"வாசிக்கும் சமூகத்தினை உருவாக்க, சிறுவர்களிடமிருந்து ஆரம்பிப்போம்"** எனும் தொனிப்பொருளை மையமாகக் கொண்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### 02. வாசிப்பு மாதத்தின் செயற்திட்டக் குழு

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்வதற்காக செயற்திட்டக் குழுவொன்று இனை நியமிப்பது உசிதமானது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது நூலகக் குழுவொன்று காணப்படுமாயின் (கல்வி அமைச்சின் பாடசாலை நூலக ஆலோசனைச் சட்டத்தின்படி பாடசாலை நூலக செயற்திட்டக் குழுவொன்று காணப்பட வேண்டும்.) அக் குழுவின் மூலம் மற்றும் வாசிப்புச் சமூகத்தின் ஒத்துழைப்புடன் இந் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமாக இருப்பதுடன், பிரதான செயற்பாட்டுக் குழுவொன்றினை நியமித்துக் கொள்வதும் உசிதமானதாக அமைந்திருக்கும். அதன் கட்டமைப்பு கீழ்வருமாறு அமைந்திருத்தல் வேண்டும்.

- அதிபர் அல்லது பிரதி அதிபர் – குழுத் தலைவர்,
- ஆசிரிய நூலகர் அல்லது நூலகர் அல்லது நூலகப் பொறுப்பாளர் – குழுச் செயலாளர்,
- அதிபரினால் பரிந்தரைக்கப்படும் இரு ஆசிரியர்கள்,
- பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் இருவர்,
- ஆறு மாணவப் பிரதிநிதிகள்.

### 03. தொனிப்பொருளினை மையமாகக் கொண்டு நடைமுறைப்படுத்த முடியுமான நிகழ்ச்சித்திட்டங்கள்

- தொனிப்பொருளுடன் தொடர்புபட்ட நூலகத்தில் காணப்படும் பல்வேறுபட்ட பகுதிகளின் (வகைகள்) கீழ் அமைந்த புத்தகங்களின் தொகுப்பினை இனங்காணல்.
    - ஆக்கபூர்வமான சிறுவர் இலக்கிய நூல்கள்
    - பொதுப் பணி
    - கல்விப் பணி
    - விமர்சன ரீதியான நூல்கள் ( சிறுவர் நூல்கள் தொடர்பாக எழுதப்பட்டது)
    - சுயசரிதைகள்

- அப் புத்தகங்களின் தொகுப்பினை வருடத்தினுள் விசேட ஏற்பாடுகளை மேற்கொண்டு விளம்பரப்படுத்துதல் மற்றும் வாசகர்களின் வாசிப்புத் திறனை ஊக்குவித்தல் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- உத்தேசிக்கப்பட்ட தொனிப்பொருளுக்கு உரித்தான தற்போது நூலகத் தொகுப்பில் காணப்படாத உள்நாட்டு /வெளிநாடுகளைச் சேர்ந்த பல்வேறுபட்ட நூல்களை இனங்கண்டு கொள்ளல் மற்றும் அப் புத்தகங்களை கையகப்படுத்திக் கொள்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வாசகர்களின் ஆக்கப்பூர்வத் திறமையை எடுத்துக் காட்டும் படைப்புக்களை உள்ளடக்கிய சஞ்சிகையொன்றினை வெளியிடுதல்.
- சுவர் செய்தித்தாள்கள், புத்தகப் பட்டியல்கள், குறியீட்டு எண்முறை, இதழ் வெட்டுத் துணுக்குத் தொகுப்பு வெளியீடுகளை மேற்கொள்ளல்.
- விசேடமான போட்டிகளை நடாத்துதல்.
- செயலமர்வுகள் மற்றும் விரிவுரைகளை ஏற்பாடு செய்தல்.
- விளம்பரப் பலகை / மேற்கோள் உரைகள் மற்றும் விளம்பரச் சுவரொட்டிகளை காட்சிப்படுத்தல், துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு விநியோகித்தல்.
- புத்தகக் கண்காட்சிகளை நடாத்துதல்.
- இணையத்தள வலையமைப்பின் ஊடாக தொனிப்பொருளுக்கு உரிய தகவல்களை ஆராய்ந்து தயாரிக்கப்பட்ட கணனி நிகழ்ச்சித்திட்டங்களை (Power point presentation) உருவாக்குதல்.
- சிறுவர்களை மகிழ்விக்கும் நோக்கில் கதை சொல்லும் நேரங்கள், சிறுவர் திரைப்படங்கள் மற்றும் சிறுவர் நாடகங்கள் போன்ற பொழுதுப்போக்கு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- தெரிவு செய்யப்பட்ட தேசிய பருவ இதழ் அல்லது பல பருவ இதழ்கள் தொடர்பாக அறிஞர்களின் கலந்துரையாடல் / உரை அல்லது கலை சார்ந்த வேலைத்திட்டமொன்றை ஏற்பாடு செய்தல்.

## 04. பொதுவாக நடைமுறைப்படுத்த முடியுமான நிகழ்ச்சித்திட்டங்கள்

- வாசிப்பு முகாம்கள், வாசிப்பு போட்டிகளை ஏற்பாடு செய்தல்
- வாசிப்புச் சமூகத்தினை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.
- நூலக அங்கத்தவர்களை அதிகரிப்பதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைதல்.
- நிறைவேற்றப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான தகவல்களை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் மூலம் வெளியிடுதல்.
- திறமைகளை மதிப்பீடு செய்வதற்காக பரிசுகள் மற்றும் சான்றிதழ்ப் பத்திரங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.
- வாசிப்பினை ஊக்குவிக்கும் முகமாக ஏனைய ஆக்கபூர்வமான நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குறச் செய்தல்.

## 05. நிதி

இதற்காக பாரியளவில் நிதியை உபயோகப்படுத்த தேவையில்லை. பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் நிதியிலிருந்து ஒரு தொகையினையும் நூலக நிதியிலிருந்து ஒரு தொகையனையும் பெற்றுக்கொள்ள முடியும்.

## 06. அறிக்கை தாயரித்தல்.

- மேற்கொள்ளப்பட்ட சகல நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக தெளிவான முறையில் தயாரிக்கப்பட்ட அறிக்கையானது அச்சு / இருவெட்டு மற்றும் வேறு ஆதாரங்களுடன் நூலக பொறுப்பபாசிரியரினால் அதிபரின் சிபாரிசுடன் **2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம்** 28 ஆந் திகதிக்கு முன்னர் **பிரிவுத் தலைவர், விரிவாக்கல் சேவைகள் பிரிவு, தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, இலக்கம் 14, சுதந்திர வழி, கொழும்பு 07** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

- தேசிய வாசிப்பு மாதத்தில் வெற்றி பெற்ற நுலகங்களைத் தேர்ந்தெடுப்பதற்காக அடிப்படையாக கருத்திற் கொள்ளப்பட வேண்டிய அறிக்கைகளைத் தயாரிக்கும் போது மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கிய வாசிப்பு ஊக்குவிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மாத்திரம் புள்ளிகளைப் பெற்றுக்கொடுக்கும் முறைமையொன்று பின்பற்றப்படுகின்றது. அதனால் நூலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படுத்தப்பட்ட. ஏனைய சமுதாயஞ் சார் சேவைகள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையினை அதில் சேர்த்தல் கூடாது. உதாரணம் : சிரமதானம் / அன்னதானம் / இரத்த தானம் வழங்குதல் என்பவை.

- அறிக்கையினைத் தயாரிக்கும் போது அதன் வெளிப்புற அட்டை / புத்தகக் கட்டலிற்கு மேலதிக காலம் மற்றும் நிதி அவசியமில்லை. தேசிய வாசிப்பு மாத்தின் தொனிப்பொருளுக்கு அமைவாக செய்யப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் குறிப்பிட்ட வருடம் முழுவதும் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் தகவல்களை தனித்தனியான புகைப்படங்களுடன் மற்றும் உறுதிப்படுத்தக்கூடிய வேறு காரணிகளுடன் முன்வைத்தல் போதுமானதாகும்.

## 07. மதிப்பீடு

- தேசிய வாசிப்பு மாதத்தின் வினைத்திறன் மிக்க நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்திய நூலகங்கள் 2020 ஆம் ஆண்டு தேசிய வாசிப்பு மாதத்தின் தேசிய விழாவில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும்.

**P. M. Deepal Chandraratne**
Attorney-at-Law
Chairman
National Library & Documentation Services Board
14, Independence Avenue
Colombo 07

**சட்டத்தரணி பி.எம். தீபால் சந்திரரத்ன**
தலைவர்

தொடர்புகளுக்கு :- தொலைபேசி இலக்கம் – 011 2698847, தொலைநகல் - 011 2674387,
இணையத்தளம் – www.natlib.lk

## பிரதேச கலாச்சார நிலையங்கள் / கல்வியியல் கல்லூரிகள் / தொழில்நுட்ப கல்லூரி நூலகங்களில் "தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சித்திட்டம் - ஒக்டோபர்" இனை நடைமுறைப்படுத்தல்.

### 01. அறிமுகம்

2004 ஆம் ஆண்டு முதல் ஒக்டோபர் மாதத்தினை தேசிய வாசிப்பு மாதமாக அரசு பிரகடனப்படுத்தியதுடன், 2019 ஆம் ஆண்டுக்குரிய ஒக்டோபர் மாத தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வாசிப்புப் பழக்கத்தினை ஊக்குவிக்கும் முகமாக விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விசேடமான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு சகல பிரதேச கலாச்சார நிலையங்கள் / கல்வியியல் கல்லூரிகள் / தொழில்நுட்ப கல்லூரி நூலகங்களிடம் கோரியுள்ளது. 2018 ஆம் ஆண்டு முதல் தேசிய வாசிப்பு மாதத்திற்கென குறிப்பிட்டதொரு தொனிப்பொருளின் கீழ் நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கமைப்பதற்கு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை எதிர்பார்த்துள்ளது. அதற்கிணங்க இவ் வருடத்தின் தேசிய வாசிப்பு மாதத்தினை **"வாசிக்கும் சமூகத்தினை உருவாக்க, சிறுவர்களிடமிருந்து ஆரம்பிப்போம்"** எனும் தொனிப்பொருளை மையமாகக் கொண்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### 02. வாசிப்பு மாதத்தின் செயற்திட்டக் குழு

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்வதற்காக " வாசிப்பு மாதத்தின் செயற்திட்டக் குழுவொன்று" இனை நியமிப்பது உசிதமானது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது நூலகக் குழுவொன்று காணப்படுமாயின் அக் குழுவின் மூலம் மற்றும் வாசிப்புச் சமூகத்தின் ஒத்துழைப்புடன் இந் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமாக இருப்பதுடன், பிரதான செயற்பாட்டுக் குழுவொன்றினை நியமித்துக் கொள்வதும் உசிதமானதாக அமைந்திருக்கும். அதன் கட்டமைப்பு கீழ்வருமாறு அமைந்திருத்தல் வேண்டும்.

- நிறுவனத் தலைவர் அல்லது பிரதித் தலைவர் – குழுத் தலைவர்
- நூலகர் அல்லது நூலகப் பொறுப்பாளர் – குழுச் செயலாளர்
- பாடங்களுக்கு பொறுப்பான இரண்டு அலுவலர்கள்
- நிறுவனத் தலைவரினால் பெயர்க் குறிப்பிடப்படும் மூன்று உறுப்பினர்கள் (மாணவ, மாணவிகள் உள்ளடங்களாக)

### 03. தொனிப்பொருளினை மையமாகக் கொண்டு நடைமுறைப்படுத்த முடியுமான விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

- தொனிப்பொருளுடன் தொடர்புபட்ட நூலகத்தில் காணப்படும் பல்வேறுபட்ட பகுதிகளின் (வகைகள்) கீழ் அமைந்த புத்தகங்களின் தொகுப்பினை இனங்காணல்.
    - ஆக்கபூர்வமான சிறுவர் இலக்கிய நூல்கள்
    - கலை சார்ந்த படைப்புக்கள்
    - விமர்சன ரீதியான நூல்கள் ( சிறுவர் நூல்கள் தொடர்பாக எழுதப்பட்டது)
    - சுயசரிதைகள்
- அப் புத்தகங்களின் தொகுப்பினை வருடத்தினுள் விசேட ஏற்பாடுகளை மேற்கொண்டு விளம்பரப்படுத்துதல் மற்றும் வாசகர்களின் வாசிப்புத் திறனை ஊக்குவித்தல் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- உத்தேசிக்கப்பட்ட தொனிப்பொருளுக்கு உரித்தான தற்போது நூலகத் தொகுப்பில் காணப்படாத உள்நாட்டு / வெளிநாடுகளைச் சேர்ந்த பல்வேறுபட்ட நூல்களை இனங்கண்டு கொள்ளல் மற்றும் அப் புத்தகங்களை கையகப்படுத்திக் கொள்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வாசகர்களின் ஆக்கப்பூர்வத் திறமையை எடுத்துக் காட்டும் படைப்புக்களை உள்ளடக்கிய சஞ்சிகையொன்றினை வெளியிடுதல்.
- சுவர் செய்தித்தாள்கள், புத்தகப் பட்டியல்கள், குறியீட்டு எண்முறை, இதழ் வெட்டுத் துணுக்குத் தொகுப்பு வெளியீடுகளை மேற்கொள்ளல்.
- விசேடமான போட்டிகளை நடாத்துதல். (கட்டுரை, சித்திரம், பேச்சுப் போட்டி, விவாதங்கள், நாடகம், பாடல்கள்)
- செயலமர்வுகள் மற்றும் விரிவுரைகளை ஏற்பாடு செய்தல்.
- விளம்பரப் பலகை / மேற்கோள் உரைகள் மற்றும் விளம்பரச் சுவரொட்டிகளை காட்சிப்படுத்தல், துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு விநியோகித்தல்.
- புத்தகக் கண்காட்சிகளை நடாத்துதல்.
- இணையத்தள வலையமைப்பின் ஊடாக தொனிப்பொருளுக்கு உரிய தகவல்களை ஆராய்ந்து தயாரிக்கப்பட்ட கணனி நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல்.
- வாசகர்களின் வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் திரைப்படங்கள் மற்றும் நாடகங்கள் போன்ற பொழுதுபோக்கு நிகழ்ச்சித்திட்டங்களை செயல்முறைப்படுத்துதல்.
- தெரிவு செய்யப்பட்ட தேசிய பருவ இதழ் அல்லது பல பருவ இதழ்கள் தொடர்பாக அறிஞர்களின் கலந்துரையாடல் / உரை அல்லது கலை சார்ந்த வேலைத்திட்டமொன்றை ஏற்பாடு செய்தல்.

**04. பொதுவாக நடைமுறைப்படுத்த முடியுமான நிகழ்ச்சித்திட்டங்கள்**

- வாசிப்பு முகாம்கள், வாசிப்பு போட்டிகளை ஏற்பாடு செய்தல்
- வாசிப்புச் சமூகத்தினை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.
- நூலக அங்கத்தவர்களை அதிகரிப்பதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைதல்.
- நிறைவேற்றப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான தகவல்களை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் மூலம் வெளியிடுதல்.
- திறமைகளை மதிப்பீடு செய்வதற்காக பரிசுகள் மற்றும் சான்றிதழ்ப் பத்திரங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.
- வாசிப்பினை ஊக்குவிக்கும் முகமாக ஏனைய ஆக்கபூர்வமான நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குறச் செய்தல்.

**05. நிதி**

இதற்காக பாரியளவில் நிதியை உபயோகப்படுத்த தேவையில்லை. உங்கள் நிறுவனத்தின் பொது நிதியிலிருந்து ஒரு தொகையினையும் நூலக நிதியிலிருந்து ஒரு தொகையனையும் பெற்றுக்கொள்ள முடியும். செயற்குழு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**06. அறிக்கை தாயரித்தல்.**

- மேற்கொள்ளப்பட்ட சகல நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக தெளிவான முறையில் தயாரிக்கப்பட்ட அறிக்கையானது அச்சு / இருவெட்டு மற்றும் வேறு ஆதாரங்களுடன் நூலகப் பொறுப்பாளரினால் நிறுவனத் தலைவரின் சிபாரிசுடன் **2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28** ஆந் திகதிக்கு முன்னர் **பிரிவுத் தலைவர், விரிவாக்கல் சேவைகள் பிரிவு, தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, இலக்கம் 14, சுதந்திர வழி, கொழும்பு** 07 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

- தேசிய வாசிப்பு மாதத்தில் வெற்றி பெற்ற நூலகங்களைத் தேர்ந்தெடுப்பதற்காக அடிப்படையாக கருத்திற் கொள்ளப் பட வேண்டிய அறிக்கைகளைத் தயாரிக்கும் போது மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கிய வாசிப்பு ஊக்குவிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மாத்திரம் புள்ளிகளைப் பெற்றுக்கொடுக்கும் முறைமையொன்று பின்பற்றப்படுகின்றது. அதனால் நூலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படுத்தப்பட்ட ஏனைய சமுதாயஞ் சார் சேவைகள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையினை அதில் சேர்த்தல் கூடாது. உதாரணம் : சிரமதானம் / அன்னதானம் / இரத்த தானம் வழங்குதல் என்பவை.

- அறிக்கையினைத் தயாரிக்கும் போது அதன் வெளிப்புற அட்டை / புத்தகக் கட்டலிற்கு மேலதிக காலம் மற்றும் நிதி அவசியமில்லை. தேசிய வாசிப்பு மாத்தின் தொனிப்பொருளுக்கு அமைவாக செய்யப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் குறிப்பிட்ட வருடம் முழுவதும் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் தகவல்களை தனித்தனியான புகைப்படங்களுடன் மற்றும் உறுதிப்படுத்தக்கூடிய வேறு காரணிகளுடன் முன்வைத்தல் போதுமானதாகும்.

## 07. மதிப்பீடு

- தேசிய வாசிப்பு மாதத்தின் (2019) வினைத்திறன் மிக்க நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்திய நூலகங்களுக்கு 2020 ஆம் ஆண்டு தேசிய வாசிப்பு மாதத்தின் தேசிய விழாவின் போது பரிசுகள், சான்றிதழ் மற்றும் விருதுகள் வழங்கப்படுகின்றது. தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை நூலகங்களின் இறுதி தேர்வை மதிப்பாய்வு செய்து நூலகங்களிற்கான விருதை தீர்மானிக்கும்.

**சட்டத்தரணி பி.எம். தீபால் சந்திரரத்ன**
தலைவர்

**P. M. Deepal Chandraratne**
Attorney-at-Law
Chairman
National Library & Documentation Services Board
14, Independence Avenue
Colombo 07

தொடர்புகளுக்கு :- தொலைபேசி இலக்கம் – 011 2698847, தொலைநகல் - 011 2674387,
இணையத்தளம் – www.natlib.lk